**வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் - 2022**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புகளையும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களையும் உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்துக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மன்றத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் பிரகாரம் அசைவுறாத மற்றும் பாதிப்புகுட்பட்ட இருப்புக்கள் முறையே ரூபா 4,031,914 மற்றும் ரூபா 115,097 ஆக கூட்டுமொத்தமாக ரூபா 4,147,012 தொடர்பான இழப்பீட்டிற்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அசைவுறாத இருப்பாக காணப்பட்ட போதும் மீண்டும் விற்பனை செய்யக்கூடிய மட்டத்தில் மற்றும் பயன்படுத்தக்கூடிய மட்டத்தில் காணப்படுகின்றமையால் அதற்காக இழப்பீட்டு ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வில்லை. | நியமத்தின் பிரகாரம் அசைவுறாத மற்றும் இழப்பீடான இருப்புக்கள் தொடர்பாக இழப்பீட்டுக்கான ஒதுக்கம் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நடைமுறைச் சொத்தின் கீழ் தனியார் கம்பனி ஒன்றின் பெயரில் காண்பிக்கப்படுகின்ற ரூபா 9,204,498 மீதிக்காக இலங்கை கணக்கீட்டு அறிக்கையிடல் நியமம் 9 இன் 5.5 ஆம் பந்தியின் பிரகாரம் இழப்பீட்டு நட்டம் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | கிடைப்பெறாத மீதி தொடர்பாக அறவிடமுடியாக்கடன் ஒதுக்கம் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் நீண்டகாலம் காணப்பட்ட இந்த மீதிக்காக இழப்பீட்டு நட்டம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ) ரூபா 1,961,850 ஆன கூட்டுமுயற்சியுடன் 2014 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்டிருந்த படகு அச்சு நடைமுறையல்லாச் சொத்தின் கீழ் மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதியில் இழப்பீட்டு நட்டமாக நிதிநிலமைக்கூற்றில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் 36 இன் 126 பந்தியின் பிரகாரம் இழப்பீட்டின் கீழ் ஆன சொத்துக்களில் நியாயமான சொத்துக்களில் இழிவுப்பெறுமதி நிதி நிலமைக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு காண்பிக்கப்படாதிருந்தமையால் முதலீடாக காண்பிக்கப்பட்ட சிறிபங்கலாஸ் படகு அச்சுக்களின் பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 36 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நியமத்தின் பிரகாரம் இழப்பீட்டின் கீழ் ஆன சொத்துக்களில் இழிவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (ஈ) காரைநகர் படகுகளைத் தரித்து வைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மேடை (slipasay) கழுவி செல்வதை தடுக்கும் அணை மற்றும் அதன் உயரத்தில் தயாரிக்கப்பட்ட கம்பி வலை வேலி (Gabain wall chain link fence) மற்றும் படகு நிறுத்தி வைப்பதற்கு தயாரிக்கப்பட்ட மேடை (Boat Anchoring) என்ற விடயங்களுக்கு உரிய பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு பிரகாரம் நியமம் 16 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் மேலே காண்பிக்கப்பட்ட விடயங்கள் சார்ந்த எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு ஏற்படுகின்றமையினால் உரிய நியமத்தின் பிரகாரம் அந்த விடயங்களின் பெறுமதி சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யவேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காரைநகர் படகுத்தளத்தில் Dredging work, Slipway ,Gabian wall chain link Fence மற்றும் Boat Anchoring என்ற விடயங்களில் எங்களுக்கு நிர்மாணங்கள் பூர்த்தி செய்து கையளிக்கப்பட்ட திகதியான 2018.10.10 வரையிலும் பெறுமதி இனங்கண்டு எங்களுக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இன்று வரையில் தற்போது எங்களுக்கு கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் 2023 இன் கணக்குகளில் உரிய சரிசெய்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | நியமத்தின் பிரகாரம் அந்த விடயங்களின் பெறுமதி சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 39,830,681 ஆன வியாபார கடன்பட்டோர் மீதியை கூட்டுமொத்தமாக ரூபா 300,122 ஆன 19 கடன்பட்டோரிடமிருந்து மறை மீதிகள் ஈடுசெய்யப்பட்டமையினால் வியாபார கடன்பட்டோர் மீதி ரூபா 300,122 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கடன்பட்டோரிடமிருந்து கிடைக்கப்பெற்ற முற்பணத் தொகை கடன் கணக்கிலிருந்து நீக்கப்பட்டு கடன்பட்டோர் முற்பணத்தொகை பெறுவனவுக் கணக்கிற்கு மாற்றப்பட்டு 2023 ஆம் ஆண்டு முதல் பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதி மற்றும் கடன்பட்டோர் மறைமீதிகள் ஈடுசெய்ய முடியாது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு செய்யும் பட்டோலையின் பிரகாரம் தனியார் பெயரில் ரூபா 238,822 அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடு மேற்காட்டப்பட்டிருந்த போதும் கடன்பட்டோர் பட்டோலையின் பிரகாரம் அவ்வாறான பேருக்குரியதாக அறவிடுவதற்கு கடன்மீதி காணப்படவில்லை. | 2023 இன் கணக்குகளில் தேவையான கணக்கீட்டு சீராக்கங்கள் மேற்கொண்டு அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடுகள் சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (இ) | 2008 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் கொடுக்கல் வாங்கல்கள் அல்லாத மற்றும் அறவிடுவதற்கு முடியாத ரூபா 345,413 ஆன மூன்று கடன் மீதிகளுக்காக அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பழைய கிடைக்கப்பெறாத மீதிகள் தொடர்பாக அறவிட முடியாக்கடன் ஒதுக்கீடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அறவிடுவதற்கு முடியாத கடன் மீதி தொடர்பாக அறவிட முடியாக்கடன் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஈ) | 2018 முதல் 2021 வரையான காலப்பகுதிக்குரிய தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் விநியோகிக்கப்படுகின்ற பட்டியல்களின் பிரகாரம் செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணங்களின் கூட்டுமொத்தம் ரூபா 1,656,000 ஆக இருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணமாக ரூபா 971,100 வியாபார கடன் கொடுத்தோர் கணக்கில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக செலுத்த வேண்டிய நிலுவைக் கணக்காய்வுக் கட்டணம் ரூபா 684,900 குறைத்து கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணம் வியாபார கடன் கொடுத்தோர் கணக்கில் ஒதுக்கப்பட்டு கணக்காய்வுக் கட்டணம் செலுத்தும் கணக்கிற்கு மாற்றுதல் 2023 இன் நிதிக் ணக்குகளில் சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய நிலுவை கணக்காய்வுக் கட்டணம் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | கடன்பட்டோர் பேரேட்டின் பிரகாரம் 06 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய இலங்கை மீன்பிடித்துறைமுக கூட்டுத்தாபன கடன்பட்டோர் மீதி ரூபா 3,022,909 ஆக இருந்த போதிலும் சீனோர்மன்றத்திற்கு செலுத்த வேண்டிய மீதியொன்று காணப்படாதிருந்தமை 2021 மார்ச் 31 ஆந் திகதி இலங்கை மீன்பிடித்துறைமுக கூட்டுத்தாபனத்தால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் இந்த கூட்டுத்தாபனத்துடன் மீளாய்வாண்டின் போதும் மற்றும் அதற்கு முன்னைய ஆண்டின் போதும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களும் மேற்கொள்ளப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் இந்த மீதிகளின் வேறுபாடுகளை பரீட்சித்து சரிசெய்வதற்கு மன்றத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எங்களால் பல தடவைகள் Ceylon Horbours Corporation நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்ட போதும் போதியளவான பதிலொன்று கிடைக்காதிருந்ததுடன் எதிர்காலத்தில் பணிப்பாளர் சபைக்கு அறிவித்து தேவையான கணக்கீட்டு ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீதிகளின் வேறுபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மட்டக்குழி படகுத்தளத்தில் விற்பனைக் கிரயம் கணிப்பிடும் போது மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பூர்த்தி செய்யப்பட்ட பொருள் இருப்பின் பெறுமதி ரூபா 4,732,169 ஆக நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 04 இல் காண்பிக்கப்பட்ட போதிலும் 2021 ஆம் | ஏற்றுக்கொள்கின்றோம். | ஆண்டின் இறுதி இருப்பு மீதி பெறுமதி ஆரம்ப மீதியாக முன்கொண்டு செல்லும் போது |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட்ட அந்தப் பொருட்களின் பெறுமதி ரூபா 7.522,045 ஆக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டமையால் ரூபா 2,789,876 வேறுபாடு காணப்பட்டது. | | சரியாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (எ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் செலுத்த வேண்டியவையாக காண்பிக்கப்படுகின்ற ரூபா 3,712,826 ஆன பொருளாதார சேவைக் கட்டண மறை மீதி, 2007 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்ததுடன் செலுத்த வேண்டிய வருமான வரிக்காக ஈடுசெய்யும் காலம் விஞ்சியிருந்த போதிலும் சீராக்கம் மேற்கொள்ளப்படாமையினால் ஏனைய செலுத்த வேண்டியவைகளாக (other payable) மற்றும் நிறுத்தி வைத்தல் நட்டம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | செலுத்த வேண்டிய பொருளாதார சேவைக் கட்டணம் ரூபா 3,712,826.15 காணப்பட்ட போது எமது நிறுவனம் 2018, 2019, 2020, 2022 நட்ட நிலைமையில் காணப்பட்டது. இதனால் வருமானவரி செலுத்தாதிருந்தமையால் மேற்கூறப்பட்ட மீதி அவ்வாறே காணப்பட்டது. இறைவரி திணைக்களத்திலிருந்து உறுதிப்படுத்லொன்றைப் பெற்று வருமான வரிகளுடன் ஈடுசெய்வதற்கு முடியாதிருக்குமாயின் அந்த மீதி 2023 இன் நிதி கணக்குகளில் அகற்றுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | ஈடுசெய்யும் காலத்தை விஞ்சியிருந்த கொடுக்கல் வாங்கல்களை சரியான தன்மையினை இனங்கண்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஏ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி ஏனைய செலுத்த வேண்டியவைகளாக காண்பிக்கப்படுகின்ற தேசிய கட்டிட வரி ரூபா 10,406,699 ஆன மீதியின் சரியான தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | தேசத்தை கட்டியெழுப்பும் வரிகள் காணப்படுகின்ற ரூபா 10,406,694 மீதி 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற பழைய மீதியாக இருந்ததுடன் 2023 இன் நிதிக்கூற்றுக்களில் தீர்த்து வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | செலுத்த வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்குகளில் சீராக்குதல் வேண்டும். |
| (ஐ) | ரூபா 4,119,056 ஆன நிறுத்தி வைத்தல் வரி மீதியை உறுதிப்படுத்துவதற்காக மன்றத்திற்குச் சொந்தமான வரி சான்றிதழ் காணப்படாதிருந்ததுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் இந்த வரித்தொகை மீளப்பெற்றுக்கொள்ளுதல் நிச்சயமற்ற நிலைமையில் காணப்பட்டமையால் இந்த மீதியை தீர்த்து கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுத்தி வைத்தல் வரி மீதியான ரூபா 4,119,055 தொகை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து விசாரனை செய்து 2023 இன் நிதிக்கணக்குகளில் சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்ற மீதிகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | மீளாய்வாண்டுக்குரிய ஊழியர் நலன் ஒதுக்கீடுகள் ரூபா 2,819,590 தொகை செலவினமாகவும் மற்றும் ஊழியர் நலம் ஒதுக்கீடுகள் கணிப்பிடும் போது ஏற்பட்ட மிகை ஒதுக்கீட்டுத் தொகையான ரூபா 6,493,050 வருமானமாக கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அந்தப் | கணக்கீட்டுக்குத் தேவையான சீராக்கங்கள் 2023 ஆம் ஆண்டு முதல் சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமதிகளின் வேறுபாடான ரூபா 3,673,460 தொகை விற்பனையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செலவினம் ரூபா 2,819,590 இனால் குறைத்தும் விற்பனை ரூபா 3,673,460 அதிகரித்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஓ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பரீட்சை மீதியில் காண்பிக்கப்படுகின்ற 08 வருடங்களுக்கு முன்னைய மீதிகளை சமப்படுத்துவதற்காக உள்ளடக்கப்பட்ட செலவு மீதியான ரூபா 19,563,024 மீதி மற்றும் ரூபா 72,605,907 நிறுத்தி வைக்கப்பட்ட நட்ட மீதி என்பன மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்டிருந்த முறையின் சரியான தன்மை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | 2023 இன் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மீதிகளை சமப்படுத்துவதற்கு பயன்படுத்தப்பட்ட மீதிகளின் சரியான தன்மையினை இனங்கண்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஔ) | காசுப்பாய்ச்சல் கூற்றுத் தயாரிக்கும் போது நிலையான வைப்புக்களுக்காக மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய வட்டியும் உள்ளடக்கி காலப்பகுதியின் ஆரம்பத்தின் போது காசு மற்றும் காசுக்கு சமமானவைகளாக ரூபா 18,390,303 மறைமீதி மற்றும் காலப்பகுதியின் இறுதியின் போது காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் ரூபா 7,852,782 மறைமீதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அவை முறையே ரூபா 18,350,605 மற்றும் ரூபா 7,703,509 மறைமீதியாக இருக்க வேண்டியிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் காலப்பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் ரூபா 39,698 மற்றும் காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவைகள் ரூபா 149,273 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | கிடைக்க வேண்டிய மீதிகள் சரியாக இனங்காணப்படல் வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | விடயம் | நிதிக் கூற்றின் படி பெறுமதி ரூபா | நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி ரூபா | வேறுபாடு ரூபா | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| (அ) | முற்பண மீதி | 26,169,490 | 26,078,089 | 91,401 | முற்பணக் கணக்கு இணக்கம் செய்து 2023 இன் நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி மற்றும் நேரொத்த அறிக்கைகளுக்கிடையே காணப்படுகின்ற வேறுபாடுகளை இனங்கண்டு தேவையான சரிசெய்தல்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 03310014 17900965 என்ற வங்கிக் கணக்கு | 177,182 | 1,760,732 | 1,583,550 | நிதிக் கணக்குகளில் உரிய வகையில் கணக்கீடு செய்யப்பட்டுள்ள போதிலும் மேலும் கண்டறிந்து விடயங்களை சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (இ) | நிலையான வைப்பு வட்டி | 1,429,394 | 1,872,753 | 443,359 | நிலையான வைப்புக்களை புதுப்பிக்கும் அறித்தல் மற்றும் வங்கி உத்தியோகத்தரிடமிருந்து உறுதிப்படுத்தலைப் பெற்று சரியான வட்டி கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஈ) | நிலையான வைப்பு மீதி | 16,240,545 | 16,868,043 | 627,497 | வைப்புக்களைப் புதுப்பிக்கும் அறிவித்தல் மற்றும் உரிய வங்கியிலிருந்து உறுதிப்படுத்தலைப் பெற்று சரியான வட்டி கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (உ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 1,082,023,061 | 1,081,418,124 | 604,937 | இந்த வேறுபாடு நீண்டகாலமாக கொண்டுவரப்படுவதுடன் 2023 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | -மேற்படி- |
| (ஊ) | வலை மற்றும் மீன்பிடி உபகரணங்கள் | 4,199,486 | 4,155,222 | 44,264 | நிதிக் கணக்குகளில் உரிய வகையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் தொடர்ந்தும் கண்டறிந்து விடயங்களை சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (எ) | வாடகை வருமானம் | 13,906,703 | 13,700,000 | 206,703 | மட்டக்குழி வாடகை வருமானம் மீண்டும் பரீட்சித்து சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | விடயம் | தொகை<br>ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | ஊழியர் கடன் | 3,556,365 | ஊழியர் கடன் பதிவேடு | ஏற்றுக்கொள்கின்றோம். | ஊழியர்களுக்கு கடன் வழங்குதல், கடனை அறவிடுதல் மற்றும் கடன் மீதியில் ஊழியர் கடன் பதிவேடு பேணிச்செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | வங்கி கணக்கு இலக்கம் 002010016031 மற்றும் 090010002143 | 599,167 | வங்கிக்கூற்று, மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | சம்பளக் கட்டுப்பாட்டுக் கணக்கு | 603,785 | விரிவான பட்டோலை | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |
| (ஈ) | விற்பனை முற்பணம் | 38,942,213 | விரிவான பட்டோலை | ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்காய்விற்கு தேவையான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். |
| (உ) | நிலையான வைப்பு | 15,038,010 | புதுப்பிக்கும் அறிவித்தல் | நிலையான வைப்பை புதுப்பிக்கும் அறிவித்தல் சில குறைபாடுகள் காணப்படுவதுடன் எதிர்காலத்தில் சரியான பிரகாரம் அறிவித்தல் எங்களுக்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஊ) | பெறுமதிசேர் வரி | (19,042,001) | பேரேட்டுக் கணக்கு மற்றும் பட்டோலை | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொகை மீதியான ரூபா (19,042,001) தொகை தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திலிருந்து விசாரணை செய்யப்பட்டு 2023 இன் நிதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (எ) | பெறவேண்டிய வங்கி பிணைகள் | 4,423,939 | வங்கிப் பிணைக் கடிதம் அல்லது மீதி உறுதிப்படுத்தல் | கணக்கு மீதிகளைப் பெற்றுக்கொள்ளல், கணக்குக்கூற்றுக்ககளைப் பெற்றுக் கொள்வதற்குரிய அங்கீகரிக்கப்பட்கையொப்பத்துடன் உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்றதுடன் புதிய உத்தியோகத்தர்கள் நியமனம் கம்பனிப்பதிவாளர் அலுவலகத்தில் நாளதுவரையாக்குவதற்காக விவைாக நடவடிக்கைகள் | மீதி உறுதிப்படுத்தல் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | எடுக்கப்படுகின்றது. கணக்கு விபரங்களை பெற்றுக்கொண்ட பின்னர் 2023 இன் நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | கடன் பட்டோர் | 13,046,567 | கடன் பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |
| (ஐ) | ஊழியர் கடன் வட்டி | 393,100 | கடன் வட்டி கணிப்பிடும் பட்டோலை | கடன் பதிவேடு Excel Sheet ஒன்று பேணிச்செல்லப்படுவதுடன் அதன் மூலம் எந்தவொரு நபரினதும் எந்தவொரு திகதியிலும் உரிய அறவிட வேண்டிய மீதியை அறிந்துகொள்ள முடியுமாகவுள்ளது. Payroll முறைமை மூலம் சகல விபரங்களும் அறிந்து கொள்ள முடியுமாகவுள்ளது. | கடன் வட்டி கணிப்பிடும் பதிவேடு தயாரிக்கப்படல் வேண்டும். |

### 1.6 கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொருள் முற்பணமாக செலுத்துதல் ரூபா 115,463 தொகை, ஏனைய பெறுவனவுகளின் கூட்டுமொத்தம் ரூபா 1,874,584 மற்றும் மீளசெலுத்த வேண்டிய வைப்புக்கள் ரூபா 580,112 மீதிகள் தொடர்பாக எந்தவொரு எழுத்து ரீதியான சான்றுகளும் மன்றத்திடம் காணப்படவில்லை. நீண்டகாலம் முதல் கொண்டுவரப்படுகின்ற இந்த மீதிகளை அறவிடுதல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. மேலும் இந்த மீதிகளுக்காக அறவிட முடியாக்கடன் ஒதுக்கங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | இந்த அறவீடுகளை மீண்டும் அறவிடுவதற்கு உரிய வழங்குனர்களுக்கு மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் தொலைபேசி மூலமும் வழங்கல் பிரிவு உத்தியோகத்தர்களினால் உரிய தரப்பினர்களிடமிருந்து முற்பணத்தை தீர்ப்பதற்குரிய கடிதத்தை வழங்குமாறும் கோரப்பட்டுள்ளது. ஏனைய பெறவேண்டியவைகள் ரூபா 1,874,584 மீதி மற்றும் பொருள் முற்பண பெறுவனவு ரூபா 115,463 மீதி என்பவற்றிற்காக 2023 இன் நிதிக்கூற்றுக்களில் அறவிடமுடியாக்கடன் ஒதுக்கம் மேற்கொள்ளப்படும். | நீண்டகாலமாக அறவிடவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | எந்தவொரு பிணைக் காப்புறுதி பெற்றுக்கொள்ளல் அல்லது உடன்படிக்கை கைச்சாத்திடாமல் உப ஒப்பந்தம் மந்தத்தின் கீழ் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு மீன்வலை உற்பத்தி செய்வதற்கு ரூபா 5,059,049 பெறுமதியான மூலப்பொருட்கள் 2011 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 149,274 பெறுமதியான மீன்வலைகள் மண்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 4,909,775 ஆன மிகுதி மூலப்பொருட்கள் 2011 ஆம் ஆண்டு முதல் 2022 திசெம்பர் 31 ஆந் திகதி வரை கிடைக்கவேண்டியவைகளாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டவுடன் அந்த மீதிகளை அறவிடல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. அவ்வாறே அந்த மீதிகளை அறவிடுதற்காக மன்றத்தால் எந்தவொரு நடவடிக்கையும் மன்றத்தால் எடுக்கப்படாதிருந்ததுடன் அறவிடமுடியாக் கடனுக்கான ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தனியார் நிறுவனத்திலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,909,775 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட பழைய மீதியாக இருந்தவுடன் இது தொடர்பாக நிறுவனத்தின் மூல ஆவணங்கள் காணப்படாமையினால் 2023 இன் நிதிக்கூற்றுக்களில் அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடு செய்வதற்கு தேவையான கணக்கீட்டு நடவடிக்கைகளை எடுப்பதற்காக ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நீண்டகாலமாக அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கடற்றொழில் அமைச்சின் கீழ் அமுல்படுத்தப்பட்ட திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுக நிர்மாண செயற்திட்டத்திற்குரிய நிர்மாணப் பணிகள் வரையறுக்கப்பட்ட சீநோர் மன்றம் ஊடாக மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக மன்றத்திற்கு மீன்பிடி அமைச்சிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 3,527,824 ஆன தொகை 2014 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. அந்தப்பணத்தை அறவிடல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டதுடன் அதற்காக அறவிட முடியாக் கடனுக்கான ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | நிறுத்தி வைத்தல் தொகையான ரூபா 3,527,823 மீளப்பெற்றுக்கொள்வதற்கா க கடற்தொழில் அமைச்சின் செயற்திட்டப்பிரிவுடன் கலந்துரையாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றோம். | நீண்டகாலமாக அறவிடவேண்டிய பணத்தை அறவிடுவதற்கு அல்லது அறவிடமுடியாக் கடன் ஒதுக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய செலுத்த வேண்டியவைகளில் காண்பிக்கப்படுகின்ற 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 118,570 ஆன யாழ்ப்பாண இழப்பீட்டுக் கணக்கின் மீது, செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் கணக்கில் 11 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 2,938,166 ஆன 20 நிறுவனங்களுக்குரிய செலுத்த வேண்டிய மீதிகள், 2006 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை தீர்த்து வைக்கப்படாது காணப்படுகின்ற ரூபா 384,066 ஆன உரித்துக் கோராத சம்பளம் மற்றும் 2016 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 412,620 ஆன உரித்து கோராத பணிக்கொடை நிதிகளின் | 2023 இன் நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நீண்டகாலமாக செலுத்த வேண்டிய பணத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு எந்தவொரு சான்றுகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | |
| (ஆ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பெறுமதிசேர் வரிக்காக கவனத்தில் கொள்ளப்படுகின்ற கால எல்லையில் உள்ளடங்காமையினால் சீனோர் மன்றத்தின் பெறுமதி சேர் வரிக்கான பதிவு 2021 ஆம் ஆண்டில் செயலிழந்து காணப்பட்டது. எனினும் சீனோர் மன்றத்தின் பேரேட்டு கணக்கிலக்கம் 2553 இல் குறிப்பிடப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் சீனோர் மன்றத்தால் கொள்வனவு செய்யும் அடிப்படையில் செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 7,322,051 மீதியொன்று ஏனைய செலுத்த வேண்டியவைகின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர் வரி தொகை மீதி தொடர்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் விசாரணை செய்து 2023 இன் நிதிக்கூற்றுக்களில் சரிசெய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | கூட்டிணைப்பு அகவிதி | | | |
| (i) | 53 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டுமென குறிப்பிடப் பட்டுள்ள போதிலும், 2018, 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அவ்வாறு வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக் கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | கூட்டிணைப்பு அகவிதியின் படி வருடாந்த பொதுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். |
| (ii) | 58 ஆம் பந்தி | வருடாந்த பொதுக் கூட்டத்தில் பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலைவர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், தலைவரை நியமித்தல் அவ்வாறு இடம்பெற்றி ருக்கவில்லை. | பதில் அளிக்கப்பட்டிருக்க வில்லை. | கூட்டிணைப்பு அகவிதியின் படி பணிப்பாளர் சபை உறுப்பினர்களால் மன்றத்தின் தலை வர் நியமிக்கப்படு தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 11,690,121 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக கடந்த ஆண்டின் இலாபம் ரூபா 4,248,596 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 15,938,716 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் 25 சதவீதத்தால் அதாவது ரூபா 30,167,673 இனால் வீழ்ச்சியடைந்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 விகிதாசாரப் பகுப்பாய்வு

(அ) கடந்த ஆண்டு மற்றும் மீளாய்வாண்டின் நடைமுறை விகிதம் முறையே 1:1.47 மற்றும் 1:1.43 ஆகும். நடப்பாண்டில் செலுத்த வேண்டியவைகள் ரூபா 10,470,424 இனால் அதாவது 10 சதவீதத்தால் அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்தது.

(ஆ) கடந்த ஆண்டு மற்றும் நடப்பாண்டில் விரைவுச் சொத்து விகிதம் முறையே 1:0.6 மற்றும் 1:0.8 ஆக இருந்தது. நடப்பாண்டில் இருப்பு ரூபா 23,617,445 இனால் அதாவது 29 சதவீதத்தால் குறைந்தமை விகிதத்தின் அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 13,046,567 ஆன வியாபார கடன் கொடுத்தோர் மீதியில் 90 நாட்களை விட மேற்பட்ட ரூபா 11,605,759 ஆன கடன் கொடுத்தோர் 21 தனிப்பட்ட மீதிகள் ஆகும். இந்த மீதிகளுக்கிடையே கூட்டுமொத்தமாக ரூபா 379,086 ஆன 02 கடன் கொடுத்தோர் மீதிகள் 05 வருடங்கள் முதல் 10 வருடங்கள் வரையிலான காலத்திலிருந்து தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்று வருடங்கள் வரையான காலப்பகுப்பாய்வு கணக்கீட்டு முறைமை மூலம் பெற்றுக்கொள்வதற்கு முடியுமாக இருந்ததுடன் அதற்கு மேற்பட்ட காலம் வரை தேவையான போது மெனுவல் (Manual) கணிப்பிட்டு பெற்றுக்கொள்ள முடியும். | கடன்கொடுத்தோர் மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் ஏனைய பெறவேண்டிய கணக்குகளில் வங்கி சேமிப்பாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 4,423,939 மீதியை 2017 ஆம் ஆண்டில் காலாவதியான வங்கி சேமிப்புக்கள் ரூபா 1,221,893 மற்றும் காலாவதியான விபரங்கள் குறிப்பிடப்படாத 2017 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற வங்கி சேமிப்பு பத்திரங்கள் ரூபா 3,202,046 மீதிகளை மீளாய்வாண்டில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்கு மீதிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் கணக்கு கூற்றுக்களைப் பெற்றுக்கொள்வதற்குரிய அங்கீகரிக்கப்பட்ட கையொப்பத்துடன் உத்தியோகத்தர்கள் சேவையிலிருந்து விலகிச் சென்றதுடன் புதிய உத்தியோகத்தர்களின் நியமனம் கம்பனிப் பதிவாளர் அலுவலகத்தில் நாளதுவரையாக்க வேண்டியிருந்ததுடன் அந்த நாளது வரையாக்குவதற்காக விவைாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. கணக்கு விபரங்கள் வழங்கப்பட்ட பின்னர் 2023 இன் நிதிக்கூற்றுக்களை சரி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக காணப்படுகின்ற ரூபா 206,703 ஆன தனியார் நிறுவனம் ஒன்றிலிருந்து கிடைக் வேண்டிய வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விரைவாக அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாக்கடன் ஒதுக்குவதன் மூலம் தேவையான கணக்கு ரீதியான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மட்டக்குழியில் அமைக்கப்படுகின்ற மன்றத்திற்குரிய களஞ்சியக் கட்டிடம் 2022 மார்ச் 01 ஆந் திகதி வரையில் மாதாந்தம் ரூபா 1,475,000 வாடகை அடிப்படையில் வாடகையாளர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும் மன்றம் வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் அதுவரையில் இந்தக் கட்டிடத்தை பயன்படுத்தியதிலிருந்து தனியார் கம்பனி 2022 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை மாதம் ஒன்றுக்கு ரூபா 1,175,000 மாதாந்த வாடகையின் அடிப்படையில் கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் புதிய வாடகை விலைகளின் கீழ் 06 மாத காலத்திற்காக மன்றத்திற்கு ரூபா 8,850,000 வாடகை வருமானம் மீளாய்வாண்டுக்காக பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்த போதிலும் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடலில் காலதாமத்தினால் மன்றத்திற்கு ரூபா 7,050,000 மாத்திரமே வாடகையாக கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் உரிய காலத்திற்காக ரூபா 1,800,000 வாடகை வருமானம் மன்றத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டுப் பெறுமதியின் பிரகாரம் கிடைக்க வேண்டிய நிலுவை வரி வாடகை 2023 ஆம் ஆண்டில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | மன்றத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 2016 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற நடைமுறை வேலையாக காண்பிக்கப்பட்ட கூட்டுமொத்தமாக ரூபா 30,321,343 தொகை 02 மீன்பிடி கப்பல்களின் பூர்த்தி இருப்பு நிலைமைக்கு உட்படுத்துவதற்காக போதியளவான நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்கம் IMUL–A-0061-KMN மற்றும் IMUL–A-0062-KMN என்ற இரண்டு கப்பல்களும் எங்களால் உப ஒப்பந்த அடிப்படையின் கீழ் தனியார் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த கட்டளைகள் இரண்டாகும். எனினும் உரிய நிறுவனம் இதுவரை அந்த கப்பல்கள் இரண்டையும் பூர்த்தி செய்திருக்கவில்லை. அதனால் நடைமுறை வேலையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு நலனான வகையில் இந்த கப்பல்களின் உற்பத்தி நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2022 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட 2020 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களுக்கு உரிய ரூபா 4,732,169 ஆன இருப்பினை விற்பனை செய்வதற்கோ அல்லது அகற்றுவதற்கோ மீளாய்வாண்டின் போதும் போதியளவான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கட்டளை கையளித்து மீண்டும் எடுத்துச் செல்வதற்கு முடியாமையினால் சில விடயங்கள் ஏற்பட்டுள்ளதுடன் அந்த விடயங்கள் புதிய வாடிக்கையாளர்களைக் கண்டறிந்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மன்றத்துக்கு பாதகம் இல்லாத வகையில் உரிய இருப்புக்களை விற்பனை செய்வதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ அல்லது அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தால் உற்பத்தி நடவடிக்கைகள் பல்வேறு விடயங்களை குறித்துரைத்த ரீதியில் உள்ளடக்கி 2022 ஆம் ஆண்டில் நிறைவேற்ற வேண்டிய 28 செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக்கிடையே ரூபா 149.35 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட 15 செயற்பாடுகளுக்காக எந்தவொரு நிதிசார் செயல் முன்னேற்றமோ பௌதீக செயல் முன்னேற்றமோ அடைந்துகொள்ளப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட உற்பத்திகளுக்காக கட்டளை கிடைக்காமையினால் இவ்வாறான நிலைமை ஏற்பட்டிருந்தது. | மதிப்பீடு செய்யப்பட்ட செயற்பாடுகளின் நிதிசார் மற்றும் பௌதீக செயல் முன்னேற்றங்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் திட்டமிடல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 22.524 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்ட 40 பனிக்கட்டிப் பெட்டிகள், பைபர் கிளாஸ் தாங்கிகள் 04 மற்றும் 10 மிதவைகளுக்காக ரூபா 6.78 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் போதியளவான பௌதீக செயல் முன்னேற்றம் அடையப்படவில்லை. | மீன் பெட்டி தாங்கிகள் மற்றும் மிதவைகள் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பௌதீக செயல்முன்னேற்றத்தைப் பெறுதல் வேண்டும். |
| (இ) | ரூபா 210.921 மில்லியன் மதிப்பீடொன்றின் கீழ் ஆண்டு முழுவதும் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட 07 செயற்பாடுகளுக்காக ரூபா 63.94 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அந்த செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 75 சதவீதத்தை விட குறைவாக அடையப்பட்டிருந்தது. | எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மற்றும் கிடைக்கின்ற தகவல்களைக் கவனத்தில் கொள்ள வேண்டிய வேறுபாடுகள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது திட்டங்களின் செயல்முன்னேற்றம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | செயற்பாடுகளின் பௌதீக செயல் முன்னேற்றம் அடையப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | உள்நாட்டு நன்னீர் மற்றும் உவர் நீர் மீன்பிடிக் கைத்தொழிலுக்குத் தேவையான பைபர் கிளாஸ் மீன்பிடி கப்பல், படகு, தோணி மற்றும் பல்வேறு பைவர் கிளாஸ் உற்பத்திகள் மற்றும் கடற்தொழில் உபகரணங்களை உற்பத்தி செய்யதல் மற்றும் சுற்றுலா கைத்தொழிலுக்காக நவீன கப்பல்களை உற்பத்தி செய்வதுடன் கடல்சார் சேவைகளை வழங்குதல் வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் பணியாகும். அதன் பிரகாரம் பல்வேறு அரசாங்க நிறுவனங்களுக்கு விற்பனைக்காக 2022 ஆம் ஆண்டில் உற்பத்தி 2,473 உற்பத்திகளை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 447 உற்பத்திகள் மாத்திரம் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் பௌதீக செயல் முன்னேற்றம் 18 சதவீதமாக இருந்தது. வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பைபர் கிளாஸ் படகு ஏற்றுமதி செய்தல் சர்வதேச கீர்த்தி நாமத்தை உடைய பைபர் கிளாஸ் படகு உற்பத்தி செய்தல், உயர் தரத்தை உடைய மீன்பிடி படகுகள் மற்றும் பைபர் உற்பத்தி வளங்கள், வெளிநாடுகளில் பைபர் கிளாஸ் படகு உற்பத்தியில் முதலீட்டாளராகுதல் மற்றும் பல்வேறு நுகர்வோர் சேவைகளை வழங்குதல் போன்ற நோக்கங்களை வெற்றிகரமான நிறைவேற்றுவதற்கு இதன் மூலம் முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றோம். | திட்டமிடப்பட்ட உற்பத்திகளின் பௌதீக செயல் முன்னேற்றத்தை உயர்ந்த மட்டத்தில் பேணிச் செல்லல் மற்றும் மீன்பிடி கப்பல்களின் உற்பத்தியும் பல்வேறு சேவை வழங்குனர்களின் நோக்கங்களும் அடையப்படல் வேண்டும். |
| (உ) | வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றத்தின் 2022 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மட்டக்குளி பிரதேச கட்டிடத்தின் கூரையில் சூரிய வலு மின்சார உற்பத்தி செயற்திட்டத்திற்காக வாடகைக்கு வழங்கும் அடிப்படையில் ரூபா 2.4 மில்லியன் வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதில் எந்தவொரு பௌதீக செயல் முன்னேற்றமும் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்க்கப்பட்ட பிரகாரம் கூரையினை வாடகைக்கு வழங்குவதற்கு முடியாதிருந்தது. | கிரயம் ஒன்று இன்றி பெறக்கூடியதாக இருந்த வருமானம் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். |